# Message



I am privileged, as Chairman of the Hindu Endowments Board, to be part of the many activities the Board supports and in the process get to meet the organizers and helpers at these events. I am most impressed by the fact that the backbone of all these activities – whether social, cultural, educational or religious – is volunteers.

We live in a society where work pressures dominate and individuals – especially those in the earlier stages of their careers – have little time for personal interaction, leave alone community work. The vast majority of the people caught up in their work cycle have no choice: for them it is a question of bread and butter. They have to put in these long hours to pay for their homes, their children's education and their everyday needs. And – unlike the old days– the income of one spouse is, for most people, insufficient to provide for the needs of the family and so both have to work. Given this scenario it is all the more creditable that so many people have come forward to volunteer their services to the activities of the Board. I am touched by their altruism.

There is one characteristic in many of our volunteers that makes me particularly proud: their services are selfless. There is no expectation of any reward. The satisfaction they get in being useful to the community, in helping others, is reward enough for them. This is commendable. And - not surprisingly from people with such high ideals – they carry out their work with humility. These are characteristics to be admired and promoted. As the Thirukkural extols:

கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்ஆற்றுங் கொல்லோ உலகு

"Kaimaaru Vendaa Kadapaadu Maarimaatu,
En Aatrung Kolloh Ullagu".

In providing such selfless service we are living up to that expectation.

The pool of volunteers in Singapore is a limited one and it is important that it is nurtured and used in an effective way. The various temples and other Hindu organizations in Singapore should explore ways of engaging with each other to better use the talent available amongst our respective volunteers. And we should try to reciprocate what our Buddhist and Taoist friends have initiated: give whatever help we reasonably can to other religious organizations in their community efforts and thereby help build inter religious friendship. All recognized religions in Singapore are, after all, involved in the common purpose of tending to the spiritual needs of the community.

Our New Year is around the corner. Let us welcome it with renewed vigor, resilience and a sense of community spiritedness. "Puthandu Vazthukkal" to all of you.

S RAJENDRAN
CHAIRMAN
HINDU ENDOWMENTS BOARD



இந்து அறக்கட்டளை வாரியத்தின் தலைவர் என்ற முறையில் வாரியம் ஆதரவு வழங்கும் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதிலும் அதன் மூலம் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களையும் தொண்டூழியர்களையும் சந்திப்பதிலும் மகிழ்ச்சி அடைகிறேன். சமூக, கலாசார, கல்வி அல்லது சமய நிகழ்ச்சி எதுவானாலும் அதில் தொண்டூழியர்களின் பங்கு முதுகெலும்பாய் திகழ்வது குறித்து பெருமிதம் கொள்கிறேன்.

வேலை நெருக்கடிகள் மிகுந்த சமூதாயத்தில் நாம் வாழ்கிறோம். தனி நபர்கள், குறிப்பாக வாழ்க்கைத் தொழிலின் ஆரம்பக் கட்டத்தில் இருப்போருக்கு, சமூகப் பணிகளில் ஈடுபடுவதற்கு நேரம் அதிகமிருக்காது. அவர்கள் தங்கள் வாழ்க்கையை முதலில் பார்த்துக் கொள்வது முக்கியம். தங்களின் வீட்டுக் கடனை செலுத்தவும், பிள்ளைகளின் பல்வியைப் பார்த்துக் கொள்ளவும் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்கும் கூடுதல் நேரம் வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அந்த காலத்தைப் போல ஒரு நபரின் வருமானம் குடும்பத்துக்கு போதவில்லை. அதனால் பெரும்பாலான குடும்பங்களில் கணவனும் மனைவியும் வேலைக்குச் செல்வது அவசியமாகிறது. இந்த சூழ்நிலையில் வாரியத்தின் நடவடிக்கைகளுக்கு இவ்வளவு பேர் தொண்டூழியம் செய்வது பிரமிக்கத்தக்கது. இவர்களின் தன்னலம் இல்லாத பணி, என் உள்ளத்தைத் தொடுகிறது.

நமது தொண்டூழியர்கள் குறித்து நான் பெருமைப் படும் ஒன்று! அவர்களின் தன்னலம் இல்லாத சேவை மனப்பான்மை. அவர்கள் எதையும் எதிர்பாரத்து செய்வதில்லை. சமூகத்துக்கு பயனாக இருப்பதும், மற்றவர்களுக்கு உதவுவதுமே அவர்கள் எதிர்பார்க்கும் வெகுமதி. இது பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இவர்களின் பண்பு மெச்சத் தகுந்ததும் ஊக்குவிக்கப்பட வேண்டியதும் ஆகும்.

இவர்கள் “கைம்மாறு வேண்டா கடப்பாடுமாரிமாட்டு;
என்ஆற்றுங் கொல்லோ உலகு”
என்ற குறள் வழி வாழ்கின்றனர்.

சிங்கப்பூரில் தொண்டூழியர்களின் எண்ணிக்கை குறைவு என்பதால் இவர்களை ஊக்குவிப்பதும், பயனுள்ள வழிகளில் பயண்படுத்துவதும் முக்கியமாகும்.

சிங்கப்பூரில் உள்ள பல்வேறு கோயில்களும் இந்து அமைப்புகளும் நம் தொண்டூழியர்களிடம் இருக்கும் திறன்களை பகிர்ந்து கொள்ளும் வழிவகைகளை ஆராய வேண்டும். மற்ற சமய நிறுவனங்களின் சமூக முறைகளுக்கு இயன்ற உதவிகளை வழங்கி சமயங்களுக்கிடையிலான நட்புறவுக்கு கைகொடுத்துள்ளனர் நம் பௌத்த, தாவோ நண்பர்கள். இவர்களின் உதவிக்கு நாம் கைமாறு செய்ய வேண்டும்.

சிங்கப்பூரில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து சமயங்களுமே நம் சமூகத்தில் ஆன்மீகத் தேவைகளை பூர்த்தி செய்யும் பொதுவான நோக்கம் கொண்டவை என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

தமிழ் புத்தாண்டு வந்துவிட்டது. புதிய உத்வேகத்துடனும், சமூக உணர்வுடனும் அதை வரவேற்போம். அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்.

எஸ். ராஜேந்திரன்
தலைவர்
இந்து அறக்கட்டளை வாரியம்